*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*Volume 7, Issue 05 (May-2026)*
www.tamilmanam.in
*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07052026*

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor | Multidisciplinary
Article DOI: https://doi.org/10.63300/tm07052026.42

# Thachampathu: The Historical Journey of Carpenters on the Vaigai Riverbank

**Dr. Jothimuniyandi M*,**
Assistant professor, Department of Biotechnology, Thiagarajar College, Madurai-9, Tamilnadu, India.
*Corresponding Author: mmsjoe@gmail.com, Tel: +919751332049

**Article Info**
Received on 27-April-2026, Revised on 29-April-2026, Accepted on 29-April-2026, Published on 01-May-2026

## ABSTRACT

This study investigates Thachampathu as a place name that reflects the close interrelationship between Tamil society, occupation, landscape and cultural memory. Adopting a qualitative approach grounded in toponymic analysis, oral traditions and historical references, the study interprets Thachampathu as a settlement shaped by artificer occupations, agrarian practices and the riverine geography of the Vaigai basin.

The paper further explores how the village's social and economic life is closely linked to traditional craft practices, agriculture and religious, particularly temple-centered community identity. A comparative reference to Thatcham in England highlights how settlements across different cultural contexts preserve traces of livelihood and environment within their place names. Overall, the study argues that Thachampathu is not merely a geographical designation, but a living historical record of people, land use and the continuity of Tamil cultural traditions.

***KEYWORDS:*** *Thachampathu, Toponymy, Tamil culture, Carpentry tradition, Vaigai River, Rural settlement, Occupational identity, Cultural geography.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

*I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work

# தச்சம்பத்து: வைகை கரையோர தச்சர்களின் வரலாற்றுப் பயணம்

*** முனைவர். எம். ஜோதிமுனியாண்டி,** உயிரிதொழில்நுட்பத் துறை, தியாகராசர் கல்லூரி, மதுரை-9, தமிழ்நாடு, இந்தியா.

**ஆய்வுச்சுருக்கம்**

இவ்வாய்வு, "தச்சம்பத்து" என்ற ஊர்ப்பெயரை தமிழர் சமூக வாழ்க்கை, தொழில், நிலப்பரப்பு மற்றும் பண்பாட்டு நினைவகத்தின் நெருங்கிய உறவை பிரதிபலிக்கும் ஒரு அடையாளமாக ஆய்வு செய்கிறது. தரவுத்தள (qualitative) அணுகுமுறையை அடிப்படையாகக் கொண்டு, ஊர்ப்பெயர் பகுப்பாய்வு (toponymy), வாய்மொழி மரபுகள் மற்றும் வரலாற்றுச் சான்றுகள் ஆகியவற்றின் வழியாக, தச்சம்பத்து என்பது தச்சர் தொழில், விவசாய வாழ்க்கை மற்றும் வைகை ஆற்றுப்பாசன நிலவியல் சூழல் ஆகியவற்றால் வடிவமைக்கப்பட்ட குடியேற்றமாக விளக்கப்படுகிறது. மேலும், இவ்வூரின் சமூக மற்றும் பொருளாதார வாழ்க்கை மரபுக் கைவினைத்தொழில்கள், வேளாண்மை நடைமுறைகள் மற்றும் கோயில் மையமான சமூக அடையாளத்துடன் நெருங்கிய தொடர்புடையதாக இக்கட்டுரை விளக்குகிறது. இங்கிலாந்தின் "Thatcham" என்ற ஊருடன் மேற்கொள்ளப்படும் ஒப்பீடு, வேறுபட்ட கலாச்சாரப் பின்னணிகளிலும் மனித சமூகங்கள் தங்கள் வாழ்வாதாரம் மற்றும் இயற்கைச் சூழலை ஊர்ப்பெயர்களில் எவ்வாறு பதித்து வைத்துள்ளன என்பதை வெளிப்படுத்துகிறது. மொத்தத்தில், "தச்சம்பத்து" என்பது வெறும் ஒரு புவியியல் பெயராக இல்லாமல், தொழில், நிலப்பயன்பாடு மற்றும் தமிழர் பண்பாட்டு தொடர்ச்சியைப் பிரதிபலிக்கும் ஒரு உயிர்ப்புடன் கூடிய வரலாற்றுப் பதிவாகும்.

**முக்கியச் சொற்கள்**

தச்சம்பத்து, ஊர்ப்பெயர் ஆய்வு, தமிழர் பண்பாடு, வைகை நதி, கிராம வாழ்க்கை, தொழில்சார் அடையாளம், பண்பாட்டு நிலவியல்

**அறிமுகம்**

தமிழர் வாழ்க்கையில் ஊர் மற்றும் பேர் என்ற இரண்டும் தனித்தனியான கூறுகள் அல்ல; அவை ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்த அடையாளச் சின்னங்களாகும். தமிழர் பண்பாட்டில், ஒருவரை அறிமுகப்படுத்தும்போது அவரது பெயருடன் சேர்த்து அவர் பிறந்த அல்லது வாழும் ஊரையும் குறிப்பிடுவது வழக்கமாக இருந்தது ஊர்" என்பது ஒருவரின் வேர்களை, கலாசாரத்தை மற்றும் சமூகத்தை பிரதிபலிக்கிறது. ஒரு மனிதனின் பிறப்பு, வளர்ச்சி, வாழ்வியல் அனுபவங்கள் அனைத்தும் அவர் சேர்ந்துள்ள ஊருடன் தொடர்புபட்டுள்ளன. அதேவேளை, அவரது "பேர்" அவரின் தனித்துவத்தையும் சமூகத்தில் அவர் பெறும் அங்கீகாரத்தையும் வெளிப்படுத்துகிறது.

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 05 (May-2026)*
[www.tamilmanam.in](http://www.tamilmanam.in) *DOI: https://doi.org/10.63300/tm07052026*

எனவே, “ஊரும் பேரும்” என்பது ஒருவரின் இருப்பையும் மரபையும் வெளிப்படுத்தும் அடிப்படை அடையாளமாகக் கருதப்படுகிறது.

“இன்றைய உலகமயமாக்கல் காலத்தில், மக்கள் பல்வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்தாலும், “ஊரும் பேரும்” என்ற கருத்தின் உணர்ச்சி மற்றும் பண்பாட்டு முக்கியத்துவம் குறையவில்லை. அது நம்முடைய மூலங்களை நினைவூட்டுவதோடு, நம் மொழி, மரபு மற்றும் வாழ்க்கை முறையை வடிவமைக்கும் அடிப்படை அம்சமாகவும் உள்ளது. இக்கட்டுரை, “தச்சம்பத்து” என்ற ஊர்ப்பெயரை மையமாகக் கொண்டு, அதன் சொல் அமைப்பு, வரலாற்று பின்னணி மற்றும் பண்பாட்டு பரிமாணங்களை ஆராய்கிறது.

**ஆய்வுமுறை**

இவ்வாய்வு தரவுத்தள (qualitative) அணுகுமுறையை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் முதன்மையாக தமிழ் நூல்கள் மற்றும் ஆய்வுக் கட்டுரைகள் போன்ற ஆதாரங்கள் பரிசீலிக்கப்பட்டுள்ளன. அதனுடன், “தச்சம்பத்து” என்ற ஊர்ப்பெயரின் உருவாக்கம் மற்றும் பொருளை விளக்குவதற்காக ஊர்ப்பெயர் பகுப்பாய்வு (toponymy) முறையும் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும், உள்ளூர் மக்களின் பாரம்பரிய அறிவு மற்றும் வரலாற்று நினைவுகளை அறிய வாய்மொழி தகவல்கள் (oral history) சேகரிக்கப்பட்டுள்ளன. இதற்கு இணையாக, அந்தப் பகுதியின் புவியியல் அமைப்பு மற்றும் சமூக வாழ்க்கை முறைகள் ஆகியவை கருத்தில் கொள்ளப்பட்டு, ஆய்வு முழுமையாக ஒருங்கிணைந்த முறையில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

**இயற்கை அமைப்பும் நிலவியல் தன்மையும்**

ஆறாயிரம் ஆண்டுகளாக தொடர்ந்து இயங்கி வரும் பழமையான நகரமான மதுரையின் வடபகுதியில், விரிவான நாகரிகப் பரப்புக்குள், சோழவந்தான் மற்றும் திருஏடகம் ஆகிய பகுதிகளுக்கு இடையில், தேனூர் வட்டத்தைச் சார்ந்த ஒரு சிற்றூராக “தச்சம்பத்து” அமைந்துள்ளது. வைகை நதியின் வளமான கரையோரப் பகுதிகளில் ஒன்றாகவும், மேற்கு தொடர்ச்சி மலைத் தொடரின் இறங்குமுக நிலப்பகுதியில் அமைந்ததாகவும் இருப்பதால், இவ்வூர் தனித்துவமான நிலவியல் அமைப்பையும் இயற்கை வளச் செறிவையும் கொண்டதாக விளங்குகிறது. மலைப்பகுதிகளிலிருந்து வெளிப்படும் நீர்வழி ஓடைகள், நதிநீர் பரவல் மற்றும் மண் துகள்களின் அடுக்குமுறை ஆகியவை இணைந்து இப்பகுதியை விவசாயத்திற்குத் தகுந்த வளமான நிலமாக மாற்றியுள்ளன.

மலைச்சார்ந்த நிலப்பரப்பின் தொடர்ச்சியாக அமைந்திருந்தாலும், மென்மையான சாய்வு நிலம்,

, | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 05 (May-2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm07052026*

களிமண் கலந்த வளமான மண் அமைப்பு மற்றும் நீர்வளச் செறிவு ஆகியவை இப்பகுதியின் இயற்கைச் சூழலை சிறப்பிக்கின்றன. இத்தகைய சூழல் மரம், நீர், நிலம் மற்றும் வயல் போன்ற அடிப்படை இயற்கை வளங்களை ஒருங்கிணைத்து வழங்குவதால், இப்பகுதி பாரம்பரிய வேளாண்மைச் சமூகத்தின் நிலையான வாழ்வாதாரப் பகுதியாக வளர்ந்துள்ளது. மனிதர்–இயற்கை உறவு இங்கு நில பயன்பாட்டின் ஒழுங்கமைப்பிலும், குடியிருப்பு அமைப்பின் உருவாக்கத்திலும் தெளிவாக வெளிப்படுகிறது.

இச்சூழலுடன் இயைந்ததாக தமிழில் பயன்படும் "வயல்" மற்றும் "வயக்காடு" என்ற சொற்கள் நிலப்பயன்பாட்டின் பல்வேறு நிலைகளைச் சுட்டிக்காட்டும் முக்கியமான மொழிச் சான்றுகளாகும். குறிப்பாக, "வயக்காடு" என்பது "வயல் + காடு" என்ற சொற்களின் இணைப்பாகக் கருதப்படுகிறது. இது முழுமையாக சாகுபடி செய்யப்படாததுடன், மரங்கள், புதர்கள் மற்றும் புல்வெளி போன்ற இயற்கை கூறுகள் கலந்து காணப்படும் இடைநிலை நிலப்பகுதியைக் குறிக்கிறது. அதாவது, முழுமையான விவசாய நிலமும் இயற்கை காடும் இடையே அமைந்த கலப்பு நிலவடிவமாக இது விளங்குகிறது.

இத்தகைய நில அமைப்பு சங்க இலக்கிய மரபில் குறிப்பிடப்படும் நிலத்திணைச் சிந்தனையுடனும் தொடர்புடையதாகக் கருதப்படுகிறது. குறிப்பாக குறிஞ்சி (மலைப்பகுதி) மற்றும் மருதம் (விவசாய நிலம்) ஆகிய இரு நிலங்களின் பண்புகள் கலந்து காணப்படும் இடைநிலைப் பண்புகளை "வயக்காடு" பிரதிபலிக்கிறது. இதன் மூலம், தச்சம்பத்து போன்ற குடியிருப்புகள் வெறும் நிலப்பரப்பாக அல்லாது, இயற்கைச் சூழல், நிலவியல் மாற்றம் மற்றும் மனித வாழ்வியல் அமைப்பு ஆகியவற்றின் ஒருங்கிணைந்த வெளிப்பாடாக இருப்பது தெளிவாகிறது.

**ஊர்ப்பெயரின் உருவாக்கமும் பொருளும்**

ஊர்ப்பெயர்கள் ஒரு சமூகத்தின் வரலாறு, தொழில், நிலப்பரப்பு மற்றும் பண்பாட்டு அடையாளங்களை பிரதிபலிக்கும் முக்கியமான மொழியியல் சான்றுகளாகும். அவை ஒரு இடத்தின் கடந்த கால வாழ்க்கைமுறையையும் சமூக அமைப்பையும் புரிந்துகொள்ள உதவுகின்றன. அந்த வகையில், "தச்சம்பத்து" என்ற ஊர்ப்பெயரும் அதன் உருவாக்கத்தில் தனித்துவமான வரலாற்று மற்றும் பொருள் சார்ந்த அடுக்குகளை கொண்டுள்ளது.

"தச்சம்பத்து" என்பது மூன்று கூறுகளால் ஆன சொல்: தச்சு + சம் + பத்து.

- தச்சு - மரவேலை செய்யும் கலைஞர்களான தச்சர்களை குறிக்கும்; மேலும் வேய்தல், கட்டிடம் அமைத்தல், கூரை அமைத்தல் போன்ற செயல்களையும் உணர்த்துகிறது.

, | Copyright © Author(s)

- சம் - 'உருவாக்கப்பட்ட', 'சேர்க்கப்பட்ட' அல்லது 'வளர்ச்சி பெற்ற' இடத்தை உணர்த்துகிறது.
- பத்து - 'பயிர் நிலம் (வயல்)' அல்லது 'வாழ்விடப் பகுதி' என்று குறிக்கிறது.

மேலும், "பத்து" என்ற சொல்லை வயல் வெளியை வேயப்பட்ட அல்லது எல்லையிட்ட பகுதி என்ற பொருளிலும் கொள்ளலாம். இதன் மூலம், திட்டமிட்டு ஒழுங்குபடுத்தப்பட்ட வேளாண்மை நிலப்பரப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய குடியிருப்பு அமைப்பு ஆகியவை பிரதிபலிக்கப்படுகின்றன. இது நில எல்லை, பயிரிடும் நடைமுறை, மற்றும் குடியேற்ற திட்டமிடல் ஆகியவற்றின் தொடர்பை வெளிப்படுத்துகிறது.

உதாரணமாக "சொத்து பத்து" என்ற சொல்லாடல் தமிழில் பரவலாக இன்றும் பயன்பாட்டில் உள்ளது. இதில் "சொத்து" என்பது உடைமைகளை குறிக்கிறது; "பத்து" என்பது அவற்றுடன் தொடர்புடைய நிலம், வயல்வெளி அல்லது பரந்த வெளிக்காணியைக் குறிக்கிறது.

தச்சம்பத்து" என்பது மர அடிப்படையிலான வேளாண் உபகரணங்களை உருவாக்கும் தச்சர்கள் குடியிருந்து தங்கள் தொழிலை மேற்கொள்ளும் குடியிருப்பு பகுதியாக வரையறுக்கப்படுகிறது. இதன்படி, "தச்சம்பத்து" என்ற ஊர்ப்பெயரின் மொழியியல் மற்றும் சமூக வரலாற்றுப் பகுப்பாய்வு, தமிழர் தொழில், நிலம், மற்றும் சமூக அமைப்பு ஆகியவை ஒருங்கிணைந்து ஊர்ப்பெயராக நிலைபெற்றுள்ளதற்கான எடுத்துக்காட்டாகும்.

அதேவேளை, "தச்சம்பத்து" என்பதனை "வைக்கோல் கூரையால் வேயப்பட்ட குடியிருப்பு பகுதி" என்ற கருத்தியல் விளக்கத்திலும் அணுகலாம். ஆரம்பகால கிராம வாழ்வில் வைக்கோல் கூரை அமைப்புகள் பரவலாக இருந்ததுடன், அவற்றை உருவாக்கிய தச்சர்களின் கட்டிடத் திறனும் இப்பெயரில் பிரதிபலிக்கப்படுகின்றது. எனினும், இவ்விளக்கம் நேரடி சொற்பிறப்பியல் ஆதாரமாக அல்லாது, வாழ்வியல் அடிப்படையிலான பொருள் விரிவாக்கமாகக் கருதப்பட வேண்டும்.

மேலும், தச்சர்கள் மர அடிப்படையிலான கட்டிடக்கலை, கோயில் அமைப்பு, மற்றும் வேளாண்மை உபகரணங்கள் தயாரிப்பில் முக்கிய பங்கு வகித்தனர். எனவே, "தச்சம்பத்து" போன்ற பெயர்கள் ஒரு தொழில்சார் சமூகத்தின் பொருளாதார மற்றும் பண்பாட்டு அடையாளங்களை வெளிப்படுத்துகின்றன. இது தமிழர் சமூகத்தில் தொழில் அடிப்படையிலான அடையாளங்கள் நிலத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்ததையும் சுட்டிக்காட்டுகிறது.

இதனை இங்கிலாந்து நாட்டின் பெர்க்ஷயர் (Berkshire) பகுதியில், தேம்ஸ் (Thames) நதியின் முக்கிய துணை நதியான கென்னட் (Kennet) ஆற்றங்கரையில் அமைந்துள்ள "தட்சம் (Thatcham)"

, | Copyright © Author(s)

என்ற ஊருடன் ஒப்பிட்டு பார்க்கலாம். "Thatcham" என்ற ஊர்ப்பெயர், ஆங்கில மொழியின் பழமையான சொல் உருவாக்க மரபை பிரதிபலிக்கிறது. இதில் "thatch" என்பது வைக்கோல் கொண்டு கூரை அமைத்தல் என்ற தொழில்நுட்பத்தையும், "ham" என்பது கிராமம் அல்லது குடியிருப்பு பகுதியையும் குறிக்கிறது. இதன் மூலம், இயற்கை வளங்களை பயன்படுத்தி கட்டப்பட்ட ஆரம்பகால கிராமிய குடியிருப்பு அமைப்பையும், வேளாண்மை சார்ந்த வாழ்வாதாரத்தையும் இந்தப் பெயர் வெளிப்படுத்துகிறது.

மேலும், "Thatcham" பகுதி வரலாற்று ரீதியாக மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இப்பகுதியில் Mesolithic (மத்திய கற்காலம்) காலத்திலிருந்தே மனிதர்கள் வாழ்ந்ததற்கான தொல்பொருள் சான்றுகள் கண்டறியப்பட்டுள்ளன. இது, இப்பகுதி வெறும் பெயரியல் அடையாளமாக மட்டுமல்லாது, ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக தொடர்ச்சியான மனித வாழ்விடமாக இருந்ததையும் உறுதிப்படுத்துகிறது. குறிப்பாக வேட்டையாடல், மீன்பிடித்தல் மற்றும் ஆரம்ப வேளாண்மை நடவடிக்கைகள் போன்ற பழமையான வாழ்வியல் முறைகளின் தடயங்கள் இங்கு காணப்படுகின்றன.

இந்த வகையில், தமிழகத்தின் "தச்சம்பத்து" என்ற ஊர்ப்பெயரும், இங்கிலாந்தின் "Thatcham" என்ற ஊர்ப்பெயரும், இரண்டும் தத்தம் சமூகங்களின் தொழில், வாழ்வியல் மற்றும் நிலப்பரப்பு சார்ந்த அடையாளங்களை பிரதிபலிக்கும் பெயர்களாகும். ஒன்று வேளாண்மை சார்ந்த தமிழ்ச் சமூக அமைப்பை வெளிப்படுத்தும் போது, மற்றொன்று வைக்கோல் கூரை அமைத்தல் மற்றும் கிராமிய குடியிருப்பு மரபை பிரதிபலிக்கிறது. இதனால், இவ்விரு ஊர்ப்பெயர்களும் மொழி, தொழில் மற்றும் மனித வாழ்வியல் வளர்ச்சியின் வரலாற்றுச் சான்றுகளாகக் கருதப்படலாம்.

ஆனால், "Thatcham" மற்றும் "தச்சம்பத்து" ஆகியவற்றுக்கிடையிலான ஒற்றுமை நேரடி சொற்பிறப்பியல் (etymological) தொடர்பாக அல்ல. மாறாக, மனித சமூகங்கள் தங்கள் தொழில், இயற்கை சூழல், மற்றும் வாழ்வியல் நடைமுறைகளை ஊர்ப்பெயர்களாக மாற்றும் பொதுவான கலாச்சார முறையை இது பிரதிபலிக்கிறது. இதன் மூலம், வேறு மொழி மற்றும் கலாச்சாரப் பின்னணிகளில் இருந்தாலும், மனிதர்–நிலம் உறவு பெயரிடும் முறையில் எவ்வாறு வெளிப்படுகிறது என்பதும் தெளிவாகிறது.

**மர உபகரணங்களின் தொழில்முறை திறன்**

"தச்சம்பத்து" போன்ற ஊர்களின் உருவாக்கமும் செயல்பாடுகளும் பண்டைய தமிழர் சமூகத்தின் தொழில்முறை அமைப்பை தெளிவாக வெளிப்படுத்துகின்றன. குறிப்பாக, மர அடிப்படையிலான வேளாண்மை உபகரணங்கள் தயாரிப்பு இவ்வூர்களின் முக்கிய பொருளாதார மற்றும் தொழில்சார்

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 05 (May-2026)*
www.tamilmanam.in *DOI:* https://doi.org/10.63300/tm07052026

அடையாளமாக இருந்திருக்கலாம். நாங்கல், நுகத்தடி, களப்பை, மர உருளை, ஏற்றம் போன்ற கருவிகள் மரத்தால் வடிவமைக்கப்பட்டு, உழவு மற்றும் நீர்ப்பாசனச் செயல்பாடுகளில் பயன்பட்டன. இவ்வகை கருவிகள் எளிமையான வடிவமைப்பைக் கொண்டிருந்தாலும், அவை சூழலோட்டத்திற்கேற்ப மிகுந்த பயன்தன்மையைக் கொண்டிருந்தன.

மேலும், தச்சர்கள் போன்ற தொழில்முறை குழுக்கள் குறிப்பிட்ட இடங்களில் குடியேறி, தங்கள் பாரம்பரிய அறிவை தலைமுறைகளாகப் பரப்பியமை, சமூகத்தின் தொழில் அடிப்படையிலான குடியேற்ற முறையை வெளிப்படுத்துகிறது. மர வளங்கள் எளிதில் கிடைத்த இயற்கை சூழல், இத்தகைய கருவிகள் உருவாக்கத்திற்கும் பயன்பாட்டிற்கும் ஆதரவாக இருந்திருக்கலாம். இதன் மூலம், பண்டைய தமிழர் வேளாண்மை முறையில் தொழில்நுட்ப அறிவும் சுற்றுச்சூழல் பொருத்தமும் இணைந்து செயல்பட்டன என்பதும் தெளிவாகிறது.

இதனால், "தச்சம்பத்து" போன்ற ஊர்கள் வெறும் குடியிருப்பு பகுதிகள் அல்ல; அவை தொழில்முறை திறன், பொருளாதார நடவடிக்கை மற்றும் பண்பாட்டு மரபு ஆகியவற்றின் ஒருங்கிணைந்த மையங்களாகக் கருதப்படலாம்**.**

**விவசாய வளமும் பொருளாதார வாழ்க்கையும்**

தச்சம்பத்து ஊரின் பொருளாதார அமைப்பு பெரும்பாலும் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பாரம்பரிய கிராமிய பொருளாதாரமாகும். இவ்வூரில் வாழும் பெரும்பாலான மக்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். நிலத்தின் வளமையும், வைகை நதியின் நீர்வள ஆதரவும், பருவமழை சார்ந்த நீர்ப்பாசன முறைகளும் இணைந்து இப்பகுதியை பயிர்ச் செய்கைக்குத் தகுந்த வளமான நிலமாக மாற்றியுள்ளன. இதன் காரணமாக, இங்கு விவசாயம் வெறும் வாழ்வாதாரத் தொழிலாக மட்டுமன்றி, சமூக–பண்பாட்டு அமைப்பின் அடித்தளமாகவும் விளங்குகிறது.

இவ்வூரில் வெற்றிலை, தென்னை, வாழை மற்றும் நெல் போன்ற பணப் பயிர்களும் உணவுப் பயிர்களும் பரவலாகப் பயிரிடப்படுகின்றன. குறிப்பாக வெற்றிலை சாகுபடி இப்பகுதியின் முக்கியமான பொருளாதார அடையாளமாகும். தரமான உற்பத்தி மற்றும் சந்தை தேவைக்கு ஏற்ப, இங்கு விளையும் வெற்றிலை அண்டை மாவட்டங்களுக்கு மட்டுமன்றி அயல்நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுவது, இவ்வூரின் விவசாய பொருளாதாரத்தின் விரிவையும் வணிகத் தொடர்புகளையும் வெளிப்படுத்துகிறது. இதன் மூலம், உள்ளூர் விவசாயம் உலகளாவிய சந்தை வலையமைப்புடன் இணைந்துள்ளதைக் காணலாம்.

விவசாயத்துடன் இணைந்த துணைத் தொழில்களும் இவ்வூரின் பொருளாதாரத்தில் முக்கிய

பங்காற்றுகின்றன. குறிப்பாக வேய்தல் சார்ந்த தொழில்கள் பாரம்பரிய கைவினை மரபாக இங்கு வளர்ச்சி பெற்றுள்ளன. மரவேலை, கூரை அமைத்தல், கொட்டகை அமைத்தல், வேலி அமைத்தல் போன்ற பணிகளில் ஈடுபடும் தொழிலாளர்கள், கிராமிய கட்டிடக் கலையும் வாழ்க்கைச் சூழலும் இணைந்த தொழில்நுட்ப அறிவை தலைமுறைகளாகப் பேணிக் கொண்டுள்ளனர். இத்தகைய தொழில்கள் விவசாயத்துடன் நேரடியாக இணைந்தவை என்பதால், வயல்–வாழ்வு–வீடு என்ற மூன்று நிலைகளையும் ஒருங்கிணைக்கும் சமூக அமைப்பை உருவாக்குகின்றன.

மேலும், இவ்வகை துணைத் தொழில்கள் கிராமிய பொருளாதாரத்திற்கு கூடுதல் வருமான வாய்ப்புகளை வழங்குவதோடு மட்டுமல்லாமல், காலநிலை மாற்றம் மற்றும் விவசாய வருமான மாறுபாடு போன்ற சவால்களை எதிர்கொள்ளும் திறனையும் உருவாக்குகின்றன. இதனால், தச்சம்பத்து ஊரின் பொருளாதார வாழ்க்கை ஒரே துறையை சார்ந்ததாக அல்லாது, விவசாயம் மற்றும் கைவினைத் தொழில்கள் இணைந்த பல்துறை அடிப்படையிலான நிலையான கிராமிய பொருளாதாரமாக உருவெடுத்துள்ளது.

**ஆன்மீகச் சிறப்புகள்**

தச்சம்பத்து ஊரின் சமூக வாழ்வியல் அமைப்பில் ஆன்மீக நம்பிக்கைகள் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளன. இவ்வூரின் புவியியல் அமைப்பும் கிராமிய வாழ்க்கை முறையும் இணைந்து, கோயில்களை மையமாகக் கொண்ட பண்பாட்டு ஒழுங்கை உருவாக்கியுள்ளது. ஊரின் முகப்பில் அமைந்துள்ள பிள்ளையார் கோயில், புதிய தொடக்கங்கள் மற்றும் தடையகற்றும் தெய்வீக சின்னமாகக் கருதப்படுகிறது. கிராமத்தின் நடுப்பகுதியில் அமைந்துள்ள காளியம்மன் கோயில், கிராம தேவதையாக மக்களின் பாதுகாப்பையும் நலத்தையும் காக்கும் தெய்வமாக வழிபடப்படுகிறது. அதேபோல், காணி பகுதியில் அமைந்துள்ள அய்யனார் கோயில், ஊரின் எல்லைக் காவல் தெய்வமாக இருந்து கிராமத்தின் புவியியல் எல்லைகளையும் சமூக ஒழுங்கையும் பாதுகாக்கும் பண்பாட்டுச் சின்னமாக விளங்குகிறது.

இவ்வாறு கோயில்கள் ஊரின் வெவ்வேறு பகுதிகளில் திட்டமிட்டவாறு அமைந்துள்ளமை, கிராமிய வாழ்க்கையில் ஆன்மீகம் ஒரு கட்டமைப்பாகவும் ஒழுங்கமைப்பாகவும் செயல்படுவதை வெளிப்படுத்துகிறது. இவ்வூரில் கொண்டாடப்படும் முக்கியத் திருவிழாக்களில் சதுர்த்தி, ஆனி மாத அம்மன் கரகம் எடுப்பு மற்றும் குதிரை எடுப்பு ஆகியவை குறிப்பிடத்தக்கவை. இத்தகைய விழாக்கள் வெறும் மத வழிபாட்டு நிகழ்வுகளாக மட்டுமன்றி, சமூக ஒற்றுமை, பண்பாட்டு பரிமாற்றம் மற்றும் கூட்டுப் பங்கேற்பு ஆகியவற்றை வலுப்படுத்தும் சமூக நிகழ்வுகளாகவும் விளங்குகின்றன.

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07052026*

மேலும், இவ்வூரில் நூற்றாண்டுகள் பழமையான பெருமாள் கோயில் ஒன்று அமைந்துள்ளது. இக்கோயிலில் சுந்தரராஜ பெருமாள் பூதேவி மற்றும் சீதேவி சமேதராக கிழக்கு நோக்கி, அழகர்மலை திசையை நோக்கி நின்றவண்ணம் அருள்பாலிக்கிறார் என்பது இவ்வூரின் வைணவ மரபின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகிறது. கோயிலின் தலைவிருச்சமாக வில்வமரம் அமைந்துள்ளது, இது இயற்கை வழிபாடு மற்றும் தெய்வீகக் குறியீடுகள் இணைந்த பாரம்பரியத்தை சுட்டிக்காட்டுகிறது. மேலும் ராமர் பாதம், பதினெட்டாம்படி கருப்பசாமி சன்னதி, நாகர் மற்றும் நவக்கிரகங்களுக்கு தனித்தனி சன்னதிகள் அமைந்துள்ளமை, இவ்வூரின் சமய ஒற்றுமையும் பல்தெய்வ வழிபாட்டு மரபும் ஒருங்கே நிலவுவதை காட்டுகிறது.

மார்கழி மாத ஏகாதசி விழா இக்கோயிலில் மிகுந்த சிறப்புடன் கொண்டாடப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். இது பக்தி இயக்க மரபையும், ஆண்டுதோறும் தொடரும் கிராமிய ஆன்மீகச் சுழற்சியையும் பிரதிபலிக்கிறது. இவ்வூரின் மக்கள் தங்கள் ஊரை “அழகுமலையான் பூமி” எனப் புனிதமாகக் கருதுவது, அவர்களின் மதநம்பிக்கையும் நிலப்பரப்புடன் இணைந்த தெய்வீக அடையாளமும் ஒன்றாக கலந்துள்ளதைக் காட்டுகிறது. மேலும், இல்லங்களில் நடைபெறும் அனைத்து சுபகாரியங்களையும் நூபுரகங்கையில் நீராடி, அழகுமலையனை தரிசித்த பின்னரே தொடங்குவது வழக்கமாகக் கொண்டிருப்பது, இவ்வூரின் வாழ்வியல் முழுவதும் ஆன்மீக ஒழுங்கால் வழிநடத்தப்படுவதை வெளிப்படுத்துகிறது.

**அழகர் கோயிலும் கல்வெட்டுகளும்**

நமது புராதன நாகரிகம் செழித்து வளர்ந்த தமிழ்நாட்டுப் பூமியில், அதிநுட்பமான பல்வேறு கலைவடிவங்கள் மிகப் பழங்காலந்தொட்டே சிறந்து விளங்கியமை குறிப்பிடத்தக்கது. உலகின் பிற பகுதிகள் நாகரிக வளர்ச்சியை அடையாத காலத்திலேயே, தமிழ்நாடு உயர்ந்த நாகரிக நிலையை எய்தியிருந்தது. இதற்கான உறுதியான சான்றுகளாக நமது தொன்மையான கோயில்கள் விளங்குகின்றன. அவை இன்றளவும் நிலைத்திருந்து, தொன்று தொட்டு வந்த தமிழர் நாகரிகத்தின் சிறப்பை உலகிற்கு வெளிப்படுத்துகின்றன. இக்கோயில்கள் பல்வேறு கலைகளின் இருப்பிடமாகவும், கலைக்களஞ்சியமாகவும் திகழ்கின்றன. இத்தகைய சிறப்புமிக்க கோயில்களில், அழகர் கோயிலும் குறிப்பிடத்தக்க தனிச்சிறப்புடைய ஒன்றாக விளங்குகிறது. இவ்வூர் மதுரையிலிருந்து வடதிசையில் 24கி.மீ தொலைவில் உள்ளது. ஊரின் பெயரும், கோயிலின் பெயரும் ஒன்றேயாகும். இயற்கை எழில் கொஞ்சும் அழகிய மலைச்சாரலில் அமைந்துள்ள அழகர் மலையில் ஈராயிரம் ஆண்டுகட்கு முந்தைய சமணர் வாழ்விடங்களும், தமிழிக் கல்வெட்டுகளும் காணப்படுகின்றன.

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07052026*

அழகர்மலை தொடர்புடைய பகுதிகளில், கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டுப் பதிவுகளில் 'கண்ணாற்று பகுதி' என குறிப்பிடப்பட்டிருப்பது காணப்படுகிறது; இப்பெயர் இன்றும் இப்பகுதியில் வழக்கில் இருந்து வருகிறது. இதனை உறுதிப்படுத்தும் வகையில், வாய்மொழி சான்றுகளின்படி, கண்ணாற்று பகுதியில் அய்யாசாமி பிள்ளை அவர்களுக்குச் சொந்தமான நிலங்கள் இருந்ததாகவும் அறியப்படுகிறது. அவை உள்ளூர் மக்களின் நினைவிலும் மரபு வரலாற்றிலும் பதிவாகியுள்ளன என்றும் குறிப்பிடப்படுகிறது. மேலும் தச்சம்பத்து என்ற பெயருடன் தொடர்புடையதாக 'தச்சநூருடையான்' என்ற சொல்லும் காணப்படுகிறது. அதுபோல சோழவந்தானின் பழைய பெயரான 'சோழகுலத்தொங்க சதுர்வேதி மங்கலம்' என்பதும், 'தேனூர்' என்ற சொல்லும் கல்வெட்டு பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. அழகர்கோவிலில் சித்திரைத் திருவிழாவின் தொடக்கமாக கொட்டகை உற்சவம் நடைபெறுகிறது. திருவிழா மரத்தை (மர கோலை) உயர்த்தி வைக்கும் நிகழ்வுடன் இவ்விழா தொடங்கப்படுகிறது. இச்சடங்கு மர வடிவமைப்பு, கட்டமைப்பு மற்றும் தச்சர் தொழில்நுட்ப அறிவுடன் தொடர்புடையதாக இருக்கக்கூடும். இருப்பினும், இத்தகைய தொடர்புகள் நேரடியாக உறுதிப்படுத்தப்படாததால், இவை வரலாற்று, பண்பாட்டு மற்றும் மனிதவியல் கோணங்களில் மேலான ஆய்விற்குட்படுத்தப்பட வேண்டியவை.

**முடிவுரை**

தச்சம்பத்து போன்ற சிற்றூர்களின் பெயராய்வு, தமிழர் வாழ்வியலில் நிலமும் தொழிலும் எவ்வளவு ஆழமாகப் பின்னிப் பிணைந்துள்ளன என்பதை வெளிப்படுத்துகிறது. ஒவ்வொரு ஊர்ப்பெயரும் அந்தந்த நிலப்பகுதியின் இயற்கை வளம், வரலாற்றுத் தொன்மை மற்றும் அங்கு வாழ்ந்த மக்களின் சமூகப் பங்களிப்பைப் பறைசாற்றும் வரலாற்று ஆவணமாகத் திகழ்கிறது. தச்சம்பத்து ஊர்ப்பெயரின் பகுப்பாய்வு, தச்சர்களின் குடியேற்றம் மற்றும் அவர்களது கட்டிடக்கலைத் திறனை மட்டுமல்லாது, விவசாயத்தோடு அவர்கள் கொண்டிருந்த பிணைப்பையும் உறுதிப்படுத்துகிறது.
பண்டைய கல்வெட்டுகள் மற்றும் இலக்கியச் சான்றுகள் வழி அமையும் இத்தகைய ஊர்ப்பெயர் ஆய்வுகள், நமது வேர்களைத் தேடுவதற்கான திறவுகோல்களாக அமைகின்றன. எனவே, நவீனமயமாக்கல் மற்றும் உலகமயமாக்கலுக்கு இடையிலும், நமது ஊர்களின் பெயர்களிலும், அவை சுமந்து நிற்கும் மரபிலும் பொதிந்துள்ள வரலாற்று உண்மைகளைப் பாதுகாப்பதும், அடுத்த தலைமுறைக்குக் கொண்டு சேர்ப்பதும் நமது கடமையாகும். இவ்வாறு, ஊரும் பேரும் நம்முடைய வரலாற்றின் அடையாளமாகவும், தமிழர் வாழ்வியலின் தொடர்ச்சியாகவும் என்றென்றும் நிலைத்திருக்கும்.

, | Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07052026*

**துணைநூற்பட்டியல்**

[1]. பொ. இராசேந்திரன் முனைவர் சொ. சாந்தலிங்கம் சொ. சந்திரவாணன், அழகர் கோயில் கல்வெட்டுகள் ஆசிரியர்கள் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை எழும்பூர், சென்னை. 2010.

[2]. பரமசிவன், தொ. அழகர் கோயில். மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, 1989.

[3]. தலவரலாறு, அருள்மிகு கள்ளழகர் திருக்கோவில், மதுரை, 2023.

[4]. **https://www.wisdomlib.org/cities/thatcham-19907**

[5]. **"The name of Thatcham". *nickbits.co.uk*. 8 October 2017. Retrieved 30 June 2022.**

[6].https://ta.wikisource.org/wiki/மயிலை_சீனி._வேங்கடசாமி_ஆய்வுக்_களஞ்சியம்_2/035-052.

Tamilmanam